**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.37/2021- PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.காயத்ரி |
| Husband/Father Name | திரு.உதயன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.09.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை :–**

நான் ஆசிரியர் பயிற்சி பட்டப்படிப்பை படித்து முடித்துள்ளேன். தற்போது நான் வேலைக்கு செல்லவில்லை. என் வீட்டை நிர்வகித்து வருகிறேன். என் கணவர் அம்மூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கு சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, முன் பணம் பெற்று கொண்டு, கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு, பின்னர் எனக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை எனக்கு தெரியும். நான் ஆற்காடு பூபதி நகரில் வசித்து வருகிறேன். பிரதிவாதி ஆற்காடு தோப்புக்கானா சடயாயி தெருவில் வசித்து வருகிறார். பிரவாதிக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். பாண்டு பத்திரத்தில் கையெழுத்து போடும் போது தான் எனக்கு பிரதிவாதியை தெரியுமா என்றால் அதற்கு முன்பே எனக்கு அவரை தெரியும். பிரதிவாதி இரண்டு தெரு தள்ளி வசித்து வருகிறார். எனக்கு கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பிரதிவாதி என்னிடம் கிரையம் செய்ய இருப்பதாக பேசினார். வழக்கு சொத்து பிரதிவாதியின் குடும்ப சொத்து என்றால் அவரது இருப்பதாக சொன்னார். பிரதிவாதி என்னிடம் கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பேசிய போது பிரதிவாதியும், அவரது மகன் லோகேஷ், நானும், என் கணவரும் இருந்தோம். யார் யார் இருந்து பேசினோம் என என்னுடைய வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரூ.50லட்சம் முன்பணத்தை யாருடைய வங்கி கணக்கிலிருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய மாமனார், மாமியார் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று அவர்களுக்கு கிடைத்த ஓய்வு பணப்பலன்களை என்னிடம் கொடுத்து வைத்திருந்ததால் அந்தப் பணத்தை நான் எடுத்துக் கொடுத்தேன். ரூ.50 லட்சம் கொடுப்பதற்கு எனக்கு தனிப்பட்ட முறையில் பண வசதி அந்த சமயத்தில் இருக்கவில்லை. என் மாமனார் அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியராக

பணிபுரிந்து ஓய்வு பெற்றார். என் மாமியார் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். அவர்கள் இருவரும் ஓய்வு பெற்றதற்கும், பணப்பலன்கள் பெற்றதற்கும் ஆவணங்கள் உள்ளதா என்றால் அவர்கள் வைத்துள்ளார்கள். அதைப் பார்த்தால் தான் கிரைய ஒப்பந்த காலத்தில் அவர்கள் ஓய்வூதிய பணப்பலன்களை பெற்றிருந்தார்களா என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதில் உள்ள விவரங்களை எனக்கு என் வழக்கறிஞர் சொன்னார். அந்த எதிர் வழக்குரையில் எனக்கு ரூ.50லட்சம் முன்பணம் கொடுப்பதற்கு பண வசதி இல்லை என்றும், கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதி சொல்லியிருப்பது குறித்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2021-ம் ஆண்டு வழக்கு சொத்து ஒரு சதுர அடி ரூ.1675/- சந்தை மதிப்பு இருந்தது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் முதலில் சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து, பின்னர் 2008-ல் அரசுப் பள்ளியில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கும், பிரதிவாதியின் மகன் லோகேஷ் என்பவருக்கும் பழக்கம் இருந்தது என்றால் சரிதான். என் கணவர் பல சமயங்களில் பிரதிவாதியின் மகனுக்கு கடன் கொடுத்து, அவரும் திருப்பி செலுத்தியிருக்கிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கிரைய ஒப்பந்தம் போட்ட அன்றே மொத்த கிரைய தொகையான ரூ.50,50,000-ல் முன்பணமாக ரூ.50லட்சம் கொடுத்த பின்னரும் ஏன் அன்றைய தினமே கிரைய பத்திரம் பதிவு செய்துகொள்ள வில்லை என்றால், பிரதிவாதி வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் வங்கியில் இருப்பதாகவும், அதை பெற்றவுடன் கிரையப்பத்திரம் பதிவு செய்து தருவதாகவும் சொன்னதால் அன்றைய தினமே கிரையப்பத்திரம் பதிவு செய்யவில்லை. பிரதிவாதி எந்த வங்கியில் அசல் ஆவணத்தை வைத்து கடன் வாங்கியிருந்தார் என்றால் HDFC வங்கியில் அசல் ஆவணங்கள் இருப்பதாக சொன்னார். அந்த விவரத்தை அந்த வங்கிக்கு சென்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் HDFC வங்கியில் அசல் ஆவணம் இருப்பதாக வங்கியின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 28.03.2021-ல் என் கணவர் ஆற்காடு நகர காவல் நிலையத்தில் பிரதிவாதியின் மகன் மீது புகார் கொடுத்தாரா என்றால் பிரதிவாதியின் மீது கொடுத்தார். பிரதிவாதியின் மகன் மீது கொடுக்கவில்லை. விசாரணைக்காக பிரதிவாதியின் மகனை காவல் நிலையத்தில் அன்று இரவு முழுவதும் வைத்திருந்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மீது புகார் கொடுத்ததற்கு புகார் மனு நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்தப் புகாரை பார்த்தால் தான் அந்தப் புகார் யார் மீது கொடுக்கப்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான். மறுநாள் பிரதிவாதி காவல் நிலையத்திற்கு வந்தாரா என்று எனக்கு தெரியாது. என் கணவருக்கு அந்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு வந்த பிரதிவாதியிடம் என் கணவர் போலிசார் துணையோடு அவரை மிரட்டி 5, 6 பாண்டு தாள்களில்

கையெழுத்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. என்னை பிரதிவாதி திட்டியதற்காக பிரதிவாதி மீது என் கணவர் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஆற்காடு தாலுக்கா அலுவலகம் அருகே வைத்து எழுதப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரம் தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு எந்த தட்டச்சு அலுவலகத்தில், யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சொத்து விவரம் எதனடிப்படையில் எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி அந்த விவரத்தை சொன்னார். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குணாலன் மற்றும் ஜெயலலிதா ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். ஜெயலலிதா என்பவர் என்னுடைய தோழியா என்றால் எனக்கும் பிரதிவாதிக்கும், அவருடைய மகனுக்கும் தெரிந்தவர். குணாலன் என்பவர் என் கணவரின் நண்பரா என்றால் என் கணவருக்கு தெரிந்தவர். அந்த சாட்சிகள் மாலை 6.00 மணிக்கு அன்றைய தினம் வந்தனர். அவர்களை யார் அழைத்து வந்தது என்றால் அந்தப் பக்கமாக சென்ற அவர்களை நானும், பிரதிவாதியின் மகன் லோகேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட அழைத்தோம். கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். அந்த நேரத்தில் கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டம் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் செலுத்த வேண்டிய பாக்கி கிரையத் தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கவில்லை என்றால் செலுத்திவிட்டேன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து போலிசார் பாண்டு தாள்களில் பெற்று கொடுத்த பிரதிவாதியின் கையெழுத்தை வைத்துக்கொண்டு, நானும், என் கணவரும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக நாங்கள் போட்டு தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் கொடுத்திருக்கிறார் என நினைக்கிறேன். அது பற்றி என் வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பின் நகல் **பி.சா.ஆ.1** ஆகும். நானும், என் தரப்பு வழக்கறிஞரும் அந்த அறிவிப்பை பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் **பி.சா.ஆ.2** மற்றும் **பி.சா.ஆ.3** ஆகும். நான் என்னுடைய விசாரணையின் போது அந்த பதில் அறிவிப்பை தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி எந்த ஒரு காலத்திலும், வழக்கு சொத்தை விற்பதாக என்னிடம் பேசவோ, ஒப்புக்கொள்ளவோ இல்லை என்றாலும், பிரதிவாதி வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை எனக்கு எந்த காலத்திலும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், என் கணவருக்கும், பிரதிவாதி மகனுக்கும் இருந்த பணப்பரிவர்த்தனை பிரச்சனை காரணமாக பிரதிவாதியிடம் காவல் நிலையத்தில்

வைத்து பெற்ற கையெழுத்துகளை பயன்படுத்தி போலியாக கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை நானும், என் கணவரும் தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிக்கு நான் எந்த முன் பணமும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக என் மாமனார், மாமியாரிடம் ஓய்வூதிய பணத்திலிருந்து முன்பணம் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பலமுறை பிரதிவாதியை கிரையப்பத்திரம் எழுதித்தர கேட்டதாகவும், கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கேட்ட போது பிரதிவாதி என்னை திட்டியதால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகளை பிரதிவாதியோ, அவரது மகனோ அழைக்கவில்லை என்றாலும், நானும், என் கணவரும் எங்களுக்கு வேண்டப்பட்ட ஆட்களை சாட்சியாக குறிப்பிட்டு கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை போலியாக தயார் செய்தோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதியும், அவரது பிள்ளைகளும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் குடியிருக்கும் வீட்டிடை விற்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வெளியில் எங்கும் கடன் வாங்கவில்லை என்றாலும், கடன் வாங்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு வங்கியில் கடன் இருப்பதாகவும், வெளிக்கடன்களை பைசல் செய்ய பணம் தேவைப்படுவதாகவும் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் பொய்யாக குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து ரூபாய் ஒரு கோடி மதிப்பு உடையது என்றாலும், நான் சொல்வது போல் அந்த வீட்டை ரூ.50,50,000/-க்கு விற்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதியின் பிள்ளைகளுக்கும் உரிமையுள்ளது என்பதால் பிரதிவாதி மட்டும் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை எழுதிக்கொடுக்க அவருக்கும் உரிமை இல்லை என்பதால் அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மோசடியான கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:-</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.09.01 16:59:30 -0400

I Additional District Judge,
Ranipet.